<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 455/2019 நாள்: 16.02.2024 வா.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில்குமார் | தொழில் | : |
| த/பெ | : மீனாட்சி சுந்தரம் | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி அழைத்ததின் பேரில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சரத்துக்களை நான் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்துள்ளேன். வாதியிடம் நான் பத்து வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். வாதி விவசாயம் மற்றும் தேங்காய் களம் தொழில் செய்து வருகிறார். மேலும் வாதி பைனான்ஸ் செய்து வருகிறார். வாதி ஆனந்த் பைனான்ஸ், AKK பைனான்ஸ் நடத்தி வருகிறார். கிரைய ஒப்பந்தத்தில் நான் 2 வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். கிரைய ஒப்பந்தத்தில் உள்ள சரத்துக்கள் தெரியும். கிரைய ஒப்பந்தத்தில், கிரைய காலத்திற்கு பின்னிட்டு காலநீட்டிப்பு இல்லை என சரத்து உள்ளது என்றால் சரிதான். அட்வான்ஸ் தொகையை இழந்துவிடவேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த காலத்தில் தாவா சொத்தின் சந்தை மதிப்பு மற்றும் வழிகாட்டி மதிப்பு எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி என்ன காரணத்திற்காக தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்ய முன்வந்தார் என்றால் பிரதிவாதி தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்ய வந்ததாக தெரியும். வாதி பண வசதியுடையவர் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் 18 மாத கிரைய கெடு கொடுப்பதற்கு எதாவது குறிப்பிட்ட காரணம் உண்டா என்றால் வாதியும், பிரதிவாதியும் என்ன பேசிக்கொண்டார்கள் எதற்காக 18 மாத கால கெடு வழங்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தில் 2 முறை கால நீட்டிப்பு செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் வாதியிடம் பிரதிவாதி காலநீட்டிப்பு அட்வான்ஸ் தொகையில் கேட்டதால் வாதி சொன்னதின் பேரில் நான் காசோலைகள் மூலம் தொகை வழங்கினேன். காலநீட்டிப்பு செய்த பரிவர்தனைகளில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி, வாதியிடம் கடனாக வாங்கிய ரூ.10 லட்சத்திற்கு வாதிக்கு வட்டி செலுத்தி வந்தது விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். பைனான்ஸ்சில் நீண்ட காலமாக வேறு கடன் சம்மந்தமாக பிரதிவாதி வட்டி செலுத்தி வந்த விவரம் எனக்கு தெரியும். பைனான்ஸ்சில் செலுத்தப்படும் வட்டி தொகைக்கு இரசீது கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதி, வாதியிடம் கடனாக தொகை ரூ.10 லட்சம் பெற்றுள்ளார் என்றால் கடன் தொகையை பிரதிவாதி பைனான்ஸ்சில் வாங்கியுள்ளார். பிரதிவாதி,

வாதியிடம் பெற்ற கடன் தொகைக்காக வாதி, பிரதிவாதியின் சொத்தை கிரையம் எழுதிகொடுக்ககேட்டு தாக்கல் செய்த இந்த வழக்கில் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி, வாதியிடம் பெற்ற கடனுக்கு ஒரு பொறுப்புறுதிக்காக எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய ஒப்பந்தத்தை பயன்படுத்தி வாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரையம் எழுதி கொடுக்க தவறிய பிறகு வாதி சட்ட நடவடிக்கை ஏன் தாமதமாக எடுத்தார் என்றால் அது பற்றி வாதிக்குத்தான் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள கிரைய அட்வான்ஸ் தொகை ரூ.10 லட்சம் பிரதிவாதியால், வாதியிடம் இருந்து கடனாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. வாதியிடம் நான் வேலை பார்த்துவருவதால் அவரது அறிவுறுத்தலின் பேரில் இந்த வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

ஒம்/—திரு.V.ஜான்மினோ,பி.ஏ.,பி.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.